இங்கே எழுப்பியபோது, நான் பதில் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரோ, அவரைச் சார்ந்த மற்ற உறுப்பினர்களோ, இங்கே வந்து பணியாற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லை. இப்போது கூட அவர்கள் வரலாம். எனவே, அதிலே எந்தத் தடையும் இல்லை. இங்கே வந்து அவர்கள் என்ன பிரச்சினை இருக்கிறதோ, அந்த பிரச்சினையைக் கிளப்பலாம். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டியதெல்லாம் அவசியம் இல்லை என்று நேற்றே நான் சொல்லியிருக்கிறேன். அதை உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு). இல்லை. நான் நேற்றே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் முறை தவறி நடந்து கொண்ட காரணத்தால், அந்தத் தண்டனைக்கு உரியவர்தான். அந்தத் தண்டனை இருந்தால்தான், மற்ற உறுப்பினர்களும் இதைப்போன்ற தவறு செய்வதைத் தவிர்ப்பார்கள். ஒன்றுக்கு இரண்டு முறை, முறைகேடாக நடந்து கொண்டால், இப்படிப் பேரவைத் தொடக்கக் கூட்டம் முழுவதும், நாம் கூட்ட நிகழ்ச்சிகளிலே இருந்து தள்ளிவைக்கப் படுவோம் என்கிற எச்சரிக்கை மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தத் தண்டனை இருக்க வேண்டும் (குறுக்கீடு) திரு. டி. வேலையா.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி தொகுதி ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் *46* பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை வரையிலும், ஹைகிரவுண்ட் முதல் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதை மீண்டும் (குறுக்கீடு) இயக்குவது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் (குறுக்கீடு) கொண்டு வருகிறேன்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை– பேரவை தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு நீங்கள் கேட்டீர்கள். நான் அதற்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு). இன்னொரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார்.(குறுக்கீடு) இதிலே வேண்டாம். திருநாவுக்கரசு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன்.(குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

4. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(அ) திருநெல்வேலி தொகுதியில் ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்றுவந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

அறிக்கை

(அ) தடம் எண் 46 நகர பேருந்து வாயிலாக நாரயண அம்மாள் புரத்திற்கு தினசரி 6 சுற்றுக்கள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்-நாரயண அம்மாள்புரம் என இயக்கப்பட்டு வந்தது. இந்தச் சுற்றுகள் அனைத்திலுமே பயணிகள் விகிதாச்சாரம் போதிய அளவு இல்லாமல் இருந்ததால் வருமானம் இத்தடத்தில் மிகவும் குறைந்து காணப்பட்டதாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இப்பேருந்து 1991-ஆம் வருடம் நிறுத்தப்பட்டது.

இருப்பினும் மாற்று ஏற்பாடாக தடம் எண் 29 ஏ நகரப் பேருந்து வாயிலாக நாரணம்மாள்புரத்திற்கு திருநெல்வேலி ஜங்ஷன்-நாரணம்மாள்புரம் எனக் கூடுதலாக 4 சுற்றுகள் இயக்கப்பட்டு

1994 ஏப்ரல் 20]   [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

வருகின்றன. தற்போது, கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக நகரப்பேருந்து மூலம் 16 சுற்றுகளும், தனியார் பேருந்து மூலம் 16 சுற்றுகளும் ஆக 32 சுற்றுகள் இவ்வூருக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) வல்லவன் கோட்டை கிராமம் வழியாக தடம் எண் 46 மூலமாக தினசரி 4 சுற்றுகள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்-ஜங்ஷன் - துலுக்கர்பட்டி என இயக்கப்பட்டு வந்தது. எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவும் குறைந்த வருவாய் ஈட்டியதின் காரணமாகவும் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. பின்பு, மேற்படி இழப்பு சுற்றுகளை ஈடுசெய்யும்பொருட்டு தடம் எண் 23 ஏ மற்றும் 3 எப் ஆகியவற்றில் தலா இரண்டு சுற்றுகள் ஜங்ஷன் - சுப்பிரமணியபுரம், ஜங்ஷன் - வல்லவன் கோட்டை என கூடுதலாக தற்போது இயக்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்வூருக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மூலம் 16 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஜங்ஷனிலிருந்து ஹைகிரவுண்ட் செல்ல ஏராளமான பேருந்து வசதி உள்ளது.

எனவே தடம் எண் 46 நகரப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய ஆட்சியில் டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தியிருந்த அனைத்துப் பேருந்துகளையும் நாம் மீண்டும் இயக்கி இருக்கிறோம். நான் இங்கே குறிப்பிட்டிருக்கிற அந்தக் குறிப்பிட்ட தடம் எண் 46 என்ற பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தியதை மீண்டும் இயக்கவில்லை. அதற்காக பல்வேறு மாற்று ஏற்பாடுகள் செய்து இருப்பதாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருந்தாலும், எத்தனை முறை சென்று வந்ததோ, அத்தனை முறை இப்போது சென்று வரவில்லை. மேலும் எல்லா வண்டிகளையும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. டி. வேலையா: இயக்கிய பிறகு, இந்தப் பேருந்தை மட்டும் இயக்காமல் இருப்பதால். அந்தப் பகுதியில் உள்ள மக்கள், தங்களுடைய உரிமை பறிக்கப்பட்டதாகக் கருதுகிறார்கள். ஆகவே, அந்தத் தடத்தை மீண்டும் இயக்கவும், அல்லது குறைந்தபட்சம் வல்லபன்கோட்டை வரை, மாலையில் கூடுதலாக ஒரு சுற்று இயக்குவதற்கும், ஏற்பாடு செய்ய முடியுமா என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான வாகனங்கள்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தன. அதிலே இதுவும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இயக்கப்பட்ட பேருந்துக்குப் பதிலாக தடம். எண் 29-ஏ, போன்ற பேருந்துகள் 16 சுற்றுகள் இன்று இயக்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகள் 16 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே 32 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிற காரணத்தாலே, இந்தப் பேருந்தை இயக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடாக செய்திருப்பதில் 4 சுற்றுகள் குறைகின்றன. ஆகவே, மாலையில் மட்டும் ஒரு சுற்று வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, இந்தப் பேருந்தைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சிகளும், பொதுச் சங்கங்கள் என்ற பெயரிலே உள்ள பல்வேறு சங்கங்களும், இதைப் பெரிய பிரச்சினையாக ஆக்குகிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, இந்தப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், ரன்னிங் ஷெட்யூல் கொடுத்து, அதிலே ஏதாவது மாற்றம் செய்கிறபோது, எங்களைக் கலந்து ஆலோசித்தால் பொது மக்கள் மத்தியிலே விளக்கம் கொடுப்பதற்கு எங்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சுற்று மாலையில் கூடுதலாக பேருந்தை விடவும், ரன்னிங் ஷெட்யூலை எங்களுக்குக் கொடுத்து, அந்தந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து மாற்றம் செய்யவும், ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிறுத்தப்பட்டது நம்முடைய ஆட்சியிலே அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று எந்த மாற்றங்கள் ஏற்படுவதாக இருந்தாலும், அந்தந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுடைய ஒப்புதலோடு இதை நடத்தவேண்டும் என்று அறிவுரைகளை இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வழங்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு முறை மாலை நேரத்தில் அந்தப் பேருந்தைக் கூடுதலாக இயக்கவேண்டும் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிக விரைவாக அந்தப் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

முற்பகல் 11-55